# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## முதலாந்தவணைப் பரீட்சை - 2016

### செயன்முறைத் தொழினுட்பத் திறன்கள்

2075

தரம்: 07

சுட்டெண் :........................................

நேரம்: 1.30 மணித்தியாலம்

## பகுதி - I

❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.**

01) மண்ணரிப்பைத் தடுக்கும் உயிரற்ற தடை பின்வருவனவற்றுள் எது?

1) கிளிரிசிடியா வேலி அமைத்தல்

2) மூடுபயிர் வளர்த்தல்

3) வைக்கோலால் மூடுதல்

4) சேர வெட்டிவேர் தாவர வேலைகளை உருவாக்கல்.

02) பயிர்களிற்கு கூட்டெரு இடுவதன் அனுகூலமொன்று

1) மண்ணீரலிப்பு பேணப்படும். 2) கனிப்பொருட்கள் சிதைவடையும்

3) காரத்தன்மை அதிகரிக்கும் 4) அமிலத்தன்மை அதிகரிக்கும்

03) 3R எண்ணக்கரு எதனை விளக்குகின்றது

1) சுகாதாரப் பழக்கவழக்கங்கள் 2) மீள்சுழற்சி

3) உணவு உற்பத்தி 4) கைத்தொழில்

04) நாற்றுமேடையில் இடப்பட்டு நாற்றுக்களாக களத்தில் நடப்படும் வித்துக் கூட்டங்கள்

1) போஞ்சி, பயற்றை, கௌப்பி 2) பூசணி, புடோல், பாகல்

3) நெல், சோளம், குரக்கன் 4) தக்காளி, கத்தரி, மிளகாய்

05) நிலக்கீழ் தண்டுத் துண்டங்களைக் கொண்ட தாவரம்

1) இஞ்சி 2) ஈரப்பலா 3) வற்றாளை 4) முள்ளங்கி

06) ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்கு கவனம் செலுத்தப்படாத ஒன்று

1) சமைப்பவர் 2) விருந்தினர் 3) சமைக்கும் இடம் 4) உபகரணம்

07) உணவு சமைக்கும் போது கையுறை அணிவதன் நோக்கம்

1) சூடான பாத்திரங்களைப் பற்றிப்பிடிக்க

2) மின்னியல் உபகரணங்கள் இயக்குவதற்கு

3) சமையல் பாத்திரங்களைத் தேய்ப்பதற்கு

4) நாகரீகமாக இருப்பதற்கு

08) கேக் கலவையைத் தயார் செய்வதற்கு பொருத்தமான கரண்டி

1) சில்வர் கரண்டி 2) உலோகக் கரண்டி

3) மரக்கரண்டி 5) ஒட்டாத கரண்டி

09) பழுதடைந்த உணவின் இயல்பு

1) துர்நாற்றம் 2) உரிய நிறம் 3) உரியவடிவம் 4) உரிய இழையமைப்பு



kalvi.lk

10) கழுவிய பின்னர் தோலை நீக்க வேண்டியவை

1) மரவெள்ளி, கருணை
2) இராசவள்ளி, வற்றாளை
3) வெள்ளரி, பீற்றூட்
4) மோதகவள்ளி, சேம்பு

11)  குறியீடு குறிப்பது.

1) உலர்கலம்
2) மின்னோட்டம்
3) மின்குமிழ்
4) ஆளி

12) மின்னோட்டத்தை கட்டுப்படுத்துவது

1) கொள்ளளவி 2) ஆளி 3) LED 4) உலர்கலம்

13) தேவைக்கு அதிகமான மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்துவது

1) ஆளி 2) தடையி 3) மின்குமிழ் 4) கொள்ளளவி

14) இலங்கைத் தரச்சான்றிதழின் குறியீடு

1) ISO 2) SLE 3) SLS 4) SIO

15) சந்தைக்குப் பொருட்களை சேவைகளை வழங்குகின்றவர்கள்

1) நுகர்வோர் 2) வியாபாரிகள் 3) வழங்குநர்கள் 4) வாடிக்கையாளர்

16) பணக் கொடுப்பனவுகளை இலகுவாக செய்யக் கூடிய முறை

1) வங்கிகள் 2) இலத்திரணியல் அட்டை 3) உண்டியல் 4) காசோலை

17) சந்தையில் பொருட்களின் விலையைத் தீர்மானிப்பவர்கள்


1) கொள்வனவாளர், வழங்குநர்
2) மொத்தவியாபாரி, சில்லறைவியாபாரி
3) நுகர்வோர், வழங்குநர்
4) கொள்வனவாளர், உற்பத்தியாளர்

18) தரையை அலங்கரிப்பதன் நோக்கம் அல்லாதது

1) அழகூட்ட
2) கவர்ச்சிகரமற்ற இடமாக்குக
3) சிறு விலங்கினங்கின் வருகையைத் தூண்ட
4) உளத்திருப்தியைப் பெற

19) தரை அலங்கரிப்பில் மென்கூறுகளில் அடங்குவது

1) பாரிய மரங்கள்
2) இருக்கைகள்
3) பூச்சாடிகள்
4) சிலைகள்

20)  திட்டமிடப்பட்ட வரைபடத்திலுள்ள தரை அலங்கரிப்பின் நியமக் குறியீடு யாது?

1) இருக்கை
2) தடாகம்
3) பூங்காவனக் குடை
4) பற்றைத் தாவரம்

(20x1=20புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஏனைய இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

(01) 1) முதலாம் தவணையில் நீர் செய்த செயன்முறைகள் 2 தருக

2) அச்செயற்பாடொன்றில் நீர் பயன்படுத்திய கருவி உபகரணங்களைப் பட்டியல் படுத்துக.

3) செயற்பாட்டின் ஊடாக நீர் எதிர்நோக்கிய பிரச்சனைகள் 2 தருக?

4) பிரச்சனைகளை தீர்ப்பதற்காக நீர் கையாண்ட வழிகள் 2 தருக?

(10புள்ளிகள்)

(02) 1) மண் வளம் குன்றுவதற்கான காரணிகள் 3 தருக

2) கழிவுப் பொருட்களின் பிரதானமான இரண்டு வகைகளையும் தருக?

3) சிதைவடையாத கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்யும் 3முறைகளும் எவை?

4) சாடி நாற்றுமேடைக்காகப் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் 2 தருக?

(10புள்ளிகள்)

(03) 1) உணவு சமைப்பவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் 3 தருக.

2) உணவு சமைக்கும் இடம் கொண்டு இருக்க வேண்டிய இயல்புகள் 3 தருக.

3) கத்தி வகைகள் 4தருக.

4) மின்சக்தியினால் இயக்கக் கூடிய சமையலறை உபகரணங்கள் 4 தருக.

(10புள்ளிகள்)

(04) 1) சாதாரண மின்சுற்றொன்றை வரைந்து குறித்துக் காட்டுக.

2) இலத்திரினியல் துணைக் கூறுகள் 3 தருக.

3) நகர, கிராமிய மக்கள் சந்தையல்லா வேறு பொது வியாபார நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்யும் இடங்கள் எவை?

(10புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினுாடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page